

# ஆறுதல்

சிறுவர் கதைமலர்

1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆறுதல்

(சிறுவர் கதை மலர்)



தொகுப்பாசிரியர்
செ. மகேஷ்

ஆறுதல் மனித வள மேம்பாட்டு கூட்டுறவுச் சங்கம்
51, வைமன் வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல் : ஆறுதல் சிறுவர் கதை மலர்.

வகை : சிறுவர் கதைகள்.

முதற் பதிப்பு : ஏப்ரல் 2014.

வெளியீடு : ஆறுதல், மனிதவள மேம்பாட்டுக் கூட்டுறவுச் சங்கம்

ஆலோசனை : திரு. சுந்தரம் டிவகலாலா BA (hons) SLAS
முன்னாள் செயலாளர்
வடக்கு கிழக்கு மாகாண கல்வி அமைச்சு
ஆறுதல் நிறுவன நிறைவேற்று அதிகாரி

வழிகாட்டலும் தெரிவும் : திரு. அ.சண்முகதாஸ்
வாழ்நாள் பேராசிரியர்
யாழ்ப்பாணம் பல்கலைக் கழகம்

கதை ஆக்க ஆசிரிய குழுவினர் : திரு.நா.சுவாமிநாதன்
திருமதி கலா. பிரகதீஸ்வரசர்மா
திருமதி லோசனா சிவசேகரம்
திருமதி ஜெயமணி சிவநடராஜா
திருமதி மங்களகல்யாணி சிவநேசன்
திருமதி வதனி முரளி
செல்வி கௌரீஸ்வரி பரமேஸ்வரன்

தொகுப்பாசிரியர் : செ.மகேஷ்
முன்னாள் உதவிக் கல்விப் பணிப்பாளர்
வடக்கு கிழக்கு மாகாண கல்வித் திணைக்களம்

நூல் வடிவமைப்பு : செல்வி கு. வித்தியா

அச்சுப்பதிப்பு : நோபிள் பிறிண்டேர்ஸ்

விலை : ரூபாய் 90/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பான வாசகர்களே

வாசிப்பும் அதன்வழி பெருகும் சிந்தனையும் ஒவ்வொருவரதும் ஆளுமை விருத்திக்கு உதவிசெய்கின்றன. கற்றலின் பிரதான வழிமுறைகளில் சிறப்பானது வாசிப்பே! வாசிப்பை ஊக்குவிக்கும் நோக்கத்துடனும் சிறுவர்கள் தாமாகவே முன்வந்து ஆர்வத்துடனும் மகிழ்வுடனும் வாசிக்கும் விருப்பை ஏற்படுத்தும் வகையிலும் படங்களுடன் அச்சிட்டுத் தொகுக்கப்பட்டுள்ள சிறுவர் கதைகளின் தொகுப்பு இதுவாகும். இதன் வெளிவருகைக்காக ஆலோசனைகளை வழங்கிய ஆறுதல் நிறுவன நிறைவேற்று அதிகாரி திரு. சுந்தரம் டிவகலாலா அவர்களுக்கும் இதிலே சேர்க்கப்பட்டுள்ள கதைகளின் மொழிவளம் கருத்தாக்கம் ஆகியவை குறித்துக் கவனமெடுத்துக் கதைகளைத் தெரிவு செய்துதவிய வாழ்நாள் பேராசிரியர் அ.சண்முகதாஸ் அவர்களுக்கும் கதைகளை ஆக்கி வழங்கிய கதையாக்கக் குழுவினருக்கும் படங்களுடன் கூடிய பக்க வடிவமைப்பை அழகுறச் செய்துதவிய செல்வி கு. வித்தியா அவர்களுக்கும் கதைமலரை அச்சிட்டு வழங்கிய நோபிள் பிறிண்டேர்ஸ் நிறுவனத்தினருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

வாசகர்களே, உங்களின் ஆதரவின் பலத்தின் மூலம், எமது செயற்பாடுகள் மேம்பட ஊக்கம் தந்துதவுவீர்கள் என நம்புகின்றோம்.

சு. திருக்குமரன்
தலைவர்,
ஆறுதல் மனிதவள மேம்பாட்டுக் கூட்டுறவுச் சங்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | |
|---|---|
| 1. பிறந்தநாள் பரிசு | 05 |
| 2. பாலனின் அன்பு | 08 |
| 3. சுதந்திரம் எங்கே? | 11 |
| 4. வழி பிறந்தது | 14 |
| 5. நன்றி மறவேல் | 17 |
| 6. சொல்லுக் கேட்காத அம்முக்குட்டி | 19 |

# பிறந்தநாள் பரிசு




"அம்மா! அம்மா!" என்று அழைத்தவாறு பிரணவன் வந்தான். அம்மா சமையலறையில் அவசரமாக ஏதோ செய்து கொண்டிருந்தாள். பிரணவன் தாயைக் கட்டியணைத்துப் பிறந்தநாள் வாழ்த்துக்கள் கூறினான். தாய் தன் மகனை ஆனந்தக் கண்ணீர் மல்கப் பார்த்தாள்.

"அம்மா நாங்கள் இன்று கைதடி இல்லத்துக்கு எத்தனை மணிக்கு வெளிக்கிட வேண்டும்."

"பத்து மணிக்குப் போனால் காணும். நீங்கள் போய் பல்லைத்தீட்டி முகம் கழுவி வாங்கோ. தேநீர் குடிப்பம்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“ஏனம்மா ஒவ்வொரு பிறந்த நாளுக்கும் அங்கே போறனீங்கள்?”

“தம்பி! அங்கே நிறைய முதியவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் தங்கள் பிள்ளைகளையும் பேரப்பிள்ளைகளையும் பிரிந்து வாழ்கிறார் கள். பிள்ளைகளால் கைவிடப்பட்டுத் தனிமையிலும் கவலையிலும் வாழ்கின்றார்கள்.”

“அவர்களை ஏனம்மா அவர்களுடைய பிள்ளைகள் அங்கு கொண்டு போய்விட்டவை?”

“அவர்கள் தங்கட சுகத்துக்காக அவர்களைப் பராமரிக்கக் கஸ் ரப்பட்டு அங்கே கொண்டுபோய் விட்டுவிட்டார்கள். அவர்கள் பெற்று வளர்த்து ஆளாக்கியதைக்கூட, பிள்ளைகள் மறந்துவிட்டார்கள்.” அங்கே கவலையோடு இருக்கின்ற தாத்தா, பாட்டிமார்களைப் பார்க்க நாங்கள் போவோம். அங்கு போய் அவர்களோடு இருந்து அவர் களுக்குச் செய்கின்ற சின்னச் சின்ன உதவிகளால் அவர்கள் மனது குளிர்ந்து மகிழ்ச்சி அடைவார்கள். அதைத்தான் எங்களால் செய்யமுடி யும்.”

“அதுதான் அவை என்னைக் கண்டவுடன் கட்டிப்பிடித்துத் தூக்கி முத்தமிடுகின்றவை. என்னம்மா? நான் அவர்கள் தொடும்போது ஒரே அருவருப்பாக இருக்கிறது என்றல்லவா சொல்கிறனான். அது பிழை, என்னம்மா!”

“ஓம் தம்பி ‘என்னுடைய மகனின் பிள்ளையைப் போல’ என்று சொல்வதனையும் கேட்கிறனீங்கள்தானே.”

“அம்மா நான் என்னுடைய ஒவ்வொரு பிறந்தநாளிலும் இனிமேல் என்னுடைய நண்பர்களுடன் அங்கு போய், அந்த முதியவர்களுக்கு உதவி செய்து எனது பிறந்தநாளை அங்கே கொண்டாடுவோம் அம்மா.

“சரி மகன். உங்களின் நல்ல விருப்பம்தான் இனி நாங்கள் தரும், எங்கட பிறந்த நாள் பரிசு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலனின் அன்பு

பாலன் மாந்தோப்பு வழியாகவே தினமும் கடைக்குச் செல்வான். ஒரு நாள் மரத்தின் கீழ் அணிற்கூடு ஒன்றைக் கண்டு அதன் அருகே சென்றான். கூட்டின் உள்ளே அழகான சிறிய அணிற்குஞ்சு ஒன்று கண்களை உருட்டியபடி பாலனைப் பார்த்துப் பயந்தது. பாலன் மேலும் கீழும் அங்கும் இங்கும் எல்லா இடங்களையும் சுற்றிப் பார்த்தான். ஒரு மரத்தடியில் தாய் அணில் "கீச் கீச்" என்று குரல் எழுப்பியபடி அங்கும் இங்கும் ஓடித்திரிவதைக் கண்டான்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அணிற்குஞ்சைக் கையில் எடுத்தான். அதன் முதுகினைத் தடவினான். "ஆகா, என்ன பஞ்சு போன்ற உடல், சிறிய கண்கள்" எனக் கூறி, மேலும் மேலும் அதனைத் தடவி மகிழ்வுற்றான். சிறிது நேரத்திலே "கீச் கீச்" என்று ஒலி எழுப்பிய அம்மா அணிலின் ஞாபகம் அவனுக்கு வந்தது. தாய் அணிலின் அருகே குஞ்சைக் கொண்டு சென்று மெதுவாக விட்டான்.

தாய் அணில் தன் குஞ்சை அணைத்துக்கொண்டது. பாலனை நன்றியோடு பார்த்தது. பின்னர் தன் குஞ்சை வாயில் கௌவிக் கொண்டு மகிழ்ச்சியுடன் மாமரத்தில் ஏறியது.

பாலன் வீட்டிற்கு வந்து நடந்த சம்பவத்தை மகிழ்ச்சியோடு தாயிடம் கூறினான். தாய் தனது மகனின் இரக்க குணத்தைப் பாராட்டினாள். மகனை அணைத்து முத்தமிட்டாள். அப்போது தாய் அணில் தனது குஞ்சை அணைத்த, அந்தச் செயலை நினைத்துப் பாலன் மகிழ்ச்சி கொண்டான்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திரம் எங்கே?

சிறுவன் ஒருவன் கிளி ஒன்றினை அழகிய கூடு ஒன்றினுள் வளர்த்து வந்தான். அவன் தினமும் கிளிக்கு விதம் விதமான பழங்களையும் உணவுகளையும் கொடுத்து வந்தான்.

சிறுவனின் வீட்டில் நின்ற பலா மரத்தில் வசித்து வந்த காகம் ஒன்று இதனைத் தொடர்ந்து பார்த்து வந்தது. தன்னையும் இவ்வாறு உணவு தந்து ஆதரிக்க எவரும் இல்லையே என்று எண்ணி ஏங்கியது.

ஒரு நாள் காகம், யாரும் வீட்டில் இல்லாத வேளை பார்த்து, கிளியின் கூட்டின் அருகே சென்று "கிளியே கிளியே! உன்னை மனிதர்கள் இவ்வளவு அன்பாக வளர்க்கிறார்களே, உனக்கு வேண்டியதெல்லாம் தருகிறார்களே, ஆனால் என்னை மனிதர்கள் ஒருநாள் கூட இவ்வாறு கவனிப்பதில்லையே" என்று கவலையுடன் கூறியது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதைக் கேட்டுக் கிளி காகத்தைப் **பார்த்து கவலையுடன்** சிரித்தது.



"அப்பாவிக் காகமே! வெளித் தோற்றத்தைப் பார்த்து ஏமாந்து போகாதே. உனக்கு இருக்கும் சுதந்திரம் எனக்கு இல்லையே. இந்தப் பரந்த வெளியில் சிறகடித்துப் பறந்து செல்லும் சுகத்தை இந்தச் சிறிய கூட்டுக்குள் அனுபவிக்க முடியுமா? நினைத்தவுடன் பறக்கவும், விரும்பிய உணவை உண்ணவும், வசதியாக உறங்கவும், இந்தச் சிறிய கூண்டில் இருந்தால் முடியுமா?" எனத் தனது உள்ளக் குமுறலை வெளிப்படுத்தியது.



அப்போது காகம் தனக்குள்ள சுதந்திரத்தை எண்ணிப் பார்த்தது.

வீட்டின் உள்ளேயிருந்த சிறுவன் இவ்விரு பறவைகளினதும் உரையாடலை அவதானித்தான். கிளியின் துயரத்தினை உணர்ந்துகொண்டான். தனது மகிழ்ச்சிக்காகப் பறவைகளை அடைத்து வளர்த்தல் பாவம் என்பதனைப் புரிந்து கொண்டான். ஓடிச் சென்று கிளிக் கூட்டைத் திறந்துவிட்டான். கிளி சந்தோசமாகச் சிறகடித்துப் பறந்தது.

## சுதந்திரம் எங்களின் பிறப்புரிமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வழி பிறந்தது



அது ஒரு புதர்க்காடு. அன்று சரியான வெயில். அதிக வெப்பமாக இருந்தது. சிறிய குரங்கு ஒன்று தாகத்தினால் தவித்தது. அங்கும் இங்கும் எங்கும் ஓடித்திரிந்தது. களைப்படைந்தது. வழியில் ஒரு உயரமான சாடியைக் கண்டது. அதன் உள்ளே இருந்த நீரைக் குரங்கினால் பார்க்கமுடியவில்லை.

சாடியைத் தட்டிப் பார்த்தது. நீர் இருப்பது போலத் தெரிந்தது. சாடியின் மீது ஏறிக் கையை உள்ளே விட்டது. நீர் அதன் கைக்கு எட்டவில்லை. நீரை எடுப்பதற்காகச் சாடியைத் தள்ளியது. அப்போது அதன் அடியில் இருந்த பல்லி ஒன்று "யார் இந்தச் சாடியைத் தள்ளுவது?" என்று கேட்டது.

அதற்குக் குரங்கு "நான்தான் தள்ளினேன், எனக்குச் சரியான தாகம்" என்றது. அப்போது பல்லி "அறிவில்லாதவனே, சாடியைத் தள்ளி வீழ்த்தினால் அது உடைந்து விடும். நீர் முழுவதும் கீழே சிந்திவிடும். உனக்கு நீர் வேண்டுமானால் அருகே உள்ள குட்டையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நீர் உள்ளது. அங்கே போய் உன் தாகம் தீர அருந்து." என்றது.

குரங்கு குட்டையைச் சென்றடைந்தது. குட்டை மிகவும் கலங்கிய நிலையில் இருந்தது. "சீ இது வெறும் சேறு; இதிலுள்ளதெல்லாம் அழுக்கான நீர்" என்றது.

"யார் எனது குட்டையை அழுக்கு என்றது?" என்று குட்டையில் படுத்திருந்த எருமை கேட்டது.

குரங்கு பயத்துடன் "எருமையாரே என்னை மன்னிக்கவும். நானோ நீங்கள் குட்டையில் படுத்திருந்ததைக் காணவில்லை" என்றது.

ஆயினும், குட்டையில் படுத்திருந்து எழுந்த எருமையைப் பார்த்ததும் குரங்கிற்குச் சாடியிலிருந்து நீரைப் பெறும் வழி தெரிந்துவிட்டது. எருமை எழும்பும்போது குட்டையின் நீர் மட்டம் தாழ்ந்ததைக் குரங்கு அவதானித்தது. "எருமையாரே எனக்கு நீரைப் பெறும் வழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தெரிந்துவிட்டது. தயவுசெய்து முன்பு நீங்கள் இருந்ததைப்போல நீரினுள் படுத்துக்கொள்ளுங்கள் பார்க்கலாம்" என்றது.

எருமை மீண்டும் படுத்தது. நீர் மட்டம் உயர்ந்தது. குரங்கு எருமைக்கு நன்றி தெரிவித்துவிட்டு விரைவாகச் சாடியின் அருகே சென்றது.

போகும் வழியில் பெரிய கூழாங்கற்களைப் பொறுக்கிக் கொண்டே சென்றது. அந்தச் சாடியினுள் கூழாங்கற்களை ஒவ்வொன்றாகப் போட்டது. நீர் மட்டம் உயரும் ஒலி கேட்டது.

குரங்கு சாடியின் மேல் ஏறிக் கொண்டது. கையைச் சாடியினுள் விட்டது. நீர் கைக்கு எட்டியது. கையினால் நீரை அள்ளியது. ஆசை தீரப்பருகியது. தாகம் தீர்ந்தது. மகிழ்ச்சியாகத் தாவித் தாவிக் குதித்தவாறு சென்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி மறவேல்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓர் ஊரில் ஒரு பெரிய ஆலமரம் நின்றது. அதில் காகம் ஒன்று கூடு கட்டியது. காகம் கூடு கட்டுவதைக் குயில் ஒன்று அவதானித்த வாறு இருந்தது.

காகம் தினமும் தான் கட்டிய கூட்டில் முட்டைகளை இட்டு வந் தது. ஒருநாள் காகம் கூட்டில் இல்லாத வேளை பார்த்துக் குயில் அதிலே முட்டையிட்டது. இதை அறியாத காகம் முட்டைகளை அடை காத்து வந்தது. குஞ்சுகள் பொரித்த பின்னர் காகம் அவற்றிற்கு உண வூட்டி வளர்த்தது. குயில் இவற்றை எல்லாம் அவதானித்தவாறு இருந் தது.

குஞ்சுகள் வளர்ந்து குரல் எழுப்பத் தொடங்கின. குயிற் குஞ்சை இனங்கண்ட காகம் அதனைக் கொத்தி விரட்டிவிட்டது. குயில் தனது குஞ்சினைத் தன்னோடு சேர்த்துக் கொண்டு அருகில் உள்ள மரமொன்றில் வைத்துப் பாதுகாப்பாக வளர்த்தது.

ஒருநாள் காகம் இரைதேடச் சென்றது. குஞ்சுகள் கூட்டிற்கு வெளியே வந்து நின்றன. இதனை அவதானித்த ஒரு பருந்து அவற்றை நோக்கி வட்டமிட்டது.

பருந்து வட்டமிடுவதைக் குயில் கண்டது. காகக் குஞ்சுகளைப் பாதுகாக்க வேண்டும் என்ற எண்ணம் உதித்தது. உடனே குயில் தனது சிறகுகளைப் 'பட பட' என அடித்தது. வழமைக்கு மாறாகக் 'கூக்கூ...' எனக் கூவி அவலக்குரல் எழுப்பியது. குயிலின் சத்தத்தைக் கேட்ட காகக் குஞ்சுகள் தமது கூட்டுக்குள் விரைந்து சென்று பதுங்கின.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



காகமும் அந்தச் சத்தத்தைக் கேட்டுப் பறந்து அங்கே வந்தது. காகம் தன் குஞ்சுகளைக் காப்பாற்றிய குயிலைப் பார்த்து வெட்கித் தலை குனிந்தது. அது குயிலின் குஞ்சினை தனது கூட்டிலிருந்து விரட்டிய செயலை எண்ணி மனம் வருந்தியது. குயில் செய்த உதவிக்காகக் காகம் தன் நன்றியைக் குயிலுக்குத் தெரிவித்துக்கொண்டது.

**நன்றி மறப்பது நன்றன்று**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொல்லுக் கேட்காத அம்முக்குட்டி



சிங்கபுரி என்ற ஊரில் அம்மா நத்தை, அப்பா நத்தை, குட்டி நத்தை மூன்றும் வசித்து வந்தன. குட்டி நத்தையின் பெயர் அம்முக்குட்டி. அம்முக்குட்டி சரியான குழப்படி. தான் நினைப்பதைச் செய்ய அடம்பிடிக்கும்.

அம்முக்குட்டி தன் அழகை தன் முதுகிலுள்ள ஓடு கெடுப்பதாக நினைத்தது. அதைக் கழற்றி எறிந்து விட்டுச் சுதந்திரமாக உலாவ எண்ணியது. ஆனால் அம்மா நத்தை "இது வேண்டாம் அம்மு, ஒடு இல்லாமல் வெளியே திரிவது நல்லதல்ல" என எச்சரித்தது.

அம்மு, தாய் பேச்சைக் கேட்கவில்லை. ஓட்டைக் கழற்றி வைத்துவிட்டு வெளியே போனது. சிறிது தூரம் போவதற்கிடையில் வெயில் அதன் உடலைச் சுட்டது. வெம்மை தாங்காது அழுது கொண்டு தன் வீட்டிற்குத் திரும்பியது அம்முக்குட்டி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழுது கொண்டு வந்த அம்முக்குட்டிக்கு நத்தை அம்மா ஆறுதல் சொன்னது. "அம்மா சொல்லைத் தட்டக்கூடாது" என அறிவுரை கூறியது.

அதனைக் கேட்ட அம்முக்குட்டி தனது தவறை உணர்ந்துகொண்டது. இப்போது அம்முக்குட்டி அம்மா சொல்லை மீறுவதே இல்லை. ஓடு இல்லாமல் வெளியே போவதும் இல்லை.

## தாய்சொல்லைத் தட்டாதே





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'வடலிகள் வானுயரும்'

அன்பான பிள்ளைகளே,

- அன்பு, கருணை, ஆதரவு நிறைந்த சூழலில் மகிழ்வோடு வாழ்வோம்.
- நல்லனவற்றைச் சிந்திப்போம். நலமானவற்றைச் செய்வோம்.
- எங்களின் வாழ்வும் வளமும் உங்களின் உயர்வான உறுதியான செயற்பாடுகளால் சிறப்புற என்றும் ஊக்கம் தருவோம்.
- வாசிப்பு ஒவ்வொருவரையும் பூரணராக்குகிறது.

அன்புடன்
சுந்தரம் டிவகலாலா




வெளியீடு : ஆறுதல் மனிதவள மேம்பாட்டுக் கூட்டுறவுச் சங்கம்
51, வைமன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

ISBN 978-955-7503-00-4

Noble Printers, Jaffna



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org